## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 31/2012 | Date : 17.03.2026 | DW 3 |
|---|---|---|
| Name: வெங்கடபதி | S/o. ராமசாமி | |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :-**

1985 ம் ஆண்டு மேவை சண்முகராஜா மாவட்ட உறுப்பினராக இல்லை என்றால் சரியல்ல. சண்முகராஜா எந்த ஆண்டு முதல் எந்த ஆண்டு வரை மாவட்ட உறுப்பினராக இருந்தார் என்றால் 1985 ம் ஆண்டு முதல் 2012-2013 ம் ஆண்டு வரை இருந்தார். அதற்கான ஆவணங்கள் இதுவ ரை தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். 18.07.1995 யில் நடந்த மாவட்ட குழு கூட்டத்திற்கு யார் தலைவராக இருந்தார் என்று தெரியுமா என்றால் ஞாபகமில்லை. அந்த தேதியில் நடடந்த மாவட்ட குழு கூட்டத்திற்கு யார் மினிட் புக் எழுதியது என்று தெரியுமா என்றால பார்த்தால்தான் தெரியும். நான் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை என்றும் நான் மினிட்டில் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் கலந்து கொண்டேன். கையெழுத்தும் போட்டுள்ளேன். நான் சொல்வது தவறு என்றும் அதில் என்னுடைய கையெழுத்தும் இல்லை என்றும் அந்த கூட்டத்தை நடத்திய தலைவரும் கையெழுத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்காக அது போன் ஒரு ஆவணத்தை தயார் செய்துள்ளோம் என்றால்சரியல்ல.18.07.1995 யில் எழுதப்பட்ட மினிட்டில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று தற்போது சொல்லமுடியுமா என்றால் தற்போது சொல்லமுடியாது. 01.01.2010 யில் யார் தலைமையில் மாவட்ட செயற்குழு கூட்டம் எங்கு நடந்தது என்று தெரியுமா என்றால் மாவட்ட குழுஅலுவலகம் சேலத்தில் நடைபெற்றது. யார் தலைமையில் நடந்தது என்று ஞாபகமில்லை. யார் யார் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார்கள் என்றால் மாநில செயற்குழு உறுப்பினர் சௌந்தரராஜன் கலந்து கொண்டார். வேறு யார் கலந்து கொண்டார்கள் என்று தற்போது ஞாபகமில்லை. அந்த கூட்டத்தில் என்ன முடிவு செய்யப்பட்டது என்றால் ஞாபகமில்லை. அந்தசெயற்குழு கூட்டத்தில் யார் மினிட்டை எழுதினார்கள் என்றால் பார்த்தால்தான் தெரியும். யார் யார் கையெழுத்து மினிட்டில் செய்தார்கள் என்றால் பார்த்தால் தான் தெரியும். அந்த ஆவணம் நான் எழுதினேனா என்றால் பார்த்தால்தான் தெரியும். இந்த மினிட் ஆவணம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. 03.06.2008 யில் நடந்த செயற்குழு கூட்டம் எங்கு நடந்தது என்றால் ஞாபகமில்லை. யார் தலைமையில் நடந்தது என்றால் மினிட்டை பார்த்தால்

தெரியும். அதில் என்ன எழுதப்பட்டது என்று ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. அந்த செயற்குழு கூட்டத்தில் யார் யார் கலந்துகொண்டார்கள் என்றால் ஞாபகமில்லை. நான் மேற்படி செயற்குழு கூட்டத்தில் கலந்துகொண்டேனா என்றால் கலந்து கொண்டேன். பொதுவாக செயற்குழு கூட்டம் நடந்தால் அதில் யார் யார் கலந்துகொண்டார்களோ அவர்கள் மினிட்டில் கையெழுத்துசெய்ய வேண்டும் என்பது நடைமுறை என்றால் சரிதான். நான் ஒப்படைத்துள்ள ஆவணங்களில் அது போல் செயற்குழு கூட்டங்களில் கலந்துகொண்டவர்களுடைய கையெழுத்துக்கள் போடப்பட்டுள்ளனவா என்றால் போடப்பட்டுள்ளது. தனியாக அட்டெண்டன்ஸ்சிலும் வாங்குவோம். அதுபோன் யட்டெண்டன்ஸ் ஒப்படைத்துள்ளேனா என்றால் நான் ஒப்படைக்கவில்லை. அதுபோன்ற மினிட்டில் கூட்டம் நடைபெற்றால் கூட்டத்தில் யார் தலைமை வகிக்கிறார்களோ அவர் கட்டாயமாக மினிட்டில் கையெழுத்து வாங்கவேண்டும் என்றால் சரிதான். சில சமயங்களில் தலைவர் கையெழுத்து போடாமலும் இருப்பார். நான் சொல்வது தவறு என்றும் தலைவராக இருப்பவர் கையெழுத்து போடவில்லை என்றால் அந்த மினிட்டே செல்லாது என்றால் கட்டாயம் போடவேண்டும் என்றால் சரிதான். மார்க்கெட்டில் பழைய நோட்டை வாங்கிய நான் தங்கவேல், சண்முகராஜா ஆகியோர் போலியாக எங்கள் மூலமாக தாக்கல் செய்யப்பட்ட மினிட் புத்தகம் என்று சொல்லக்கூடிய ஆவணங்களை தயார் செய்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோம் என்றும் அதனால் தான் அந்த ஆவணங்களில் சில கூட்டங்கள் நடந்ததாக சொல்லும் காலங்களில் தலைவர் கையெழுத்து இல்லாமல் இந்த வழக்கிற்கான சங்கதிகளை புகுத்தி தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.எங்களுக்கு அதற்கான அவசியமில்லை. வாதியின் தனிப்பட்ட சொத்தை அபகரிக்கவேண்டும் என்பதுதான் எங்கள் நாலைந்து பேருடைய நோக்கம் என்றால் சரியல்ல. 04.05.2011யில் மாவட்ட குழு கூட்டம் எங்கு நடந்தது என்றால் மாவட்ட குழு அலுவலகம் சேலத்தில் நடந்தது. அது யாருடைய தலைமையில் நடந்தது என்றால் சௌந்தரராஜன் தலைமையில் நடந்தது. அந்த குழு கூட்டத்தில் எத்தனை பேர் கலந்துகொண்டார்கள் என்றால் 11 பேர் கலந்துகொண்டார்கள். யார் யார் கலந்து கொண்டார்கள் என்றால் ஆர்.வேங்கடபதி, உதயகுமார், குணசேகரன், ராமமூர்த்தி, சேகர், தங்கவேல், வி.கே.வெங்கடாஜலம், ஜோதிலட்சுமி, ஞானசௌந்தரி மற்றும் இரண்டு பேர் கலந்துகொண்டார்கள். அந்த தேதியில் நடந்த கூட்டத்தில் என்னனென்ன பொருட்கள் குறித்து

பேசப்பட்டது என்றால் வாதி ராஜகோபால் கட்சிக்கு சொந்தமான மேட்டூர் அலுவலகத்தின் இடத்தை அவருடைய மனைவி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்திருக்கிறார் என்ற தகவலின் அடிப்படையில் அது சம்மந்தமாக விவாவித்து மேற்படி கட்சிக்கு சொந்தமான இடத்தை அவர் எழுதி வைத்திருப்பது கட்சி விரோத நடவடிக்கை இது சம்மந்தமாக ராஜகோபாலிடம் எழுத்துமூலமான விளக்கம் கேட்பது என்று முடிவு செய்யப்பட்டது. மற்ற என்ன பொருட்கள் பற்றி பேசப்பட்டது என்றால் கட்சியின் இதர நடைமுறை பணிகள் பற்றி பேசப்பட்டது. அவை என்னவென்று குறிப்பாக தெரியுமா என்றால் ஞாபகமில்லை. மேற்படி கூட்டத்தில் வாதி கலந்து கொண்டாரா என்றால் இல்லை. அந்த செயற்குழுகூட்டத்தில் மினிட்டை யார் எழுதியது என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. பொதுவாக மினிட்டை யார் எழுதுவார்கள் என்றால் ஒரு நபர்தான் எழுதுவார். அன்றைய தேதிய மினிட்டில் யார் யார் கையெழுத்து போட்டார்கள் என்று ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகமில்லை. இந்த தேதியில் எழுதியதாக சொல்லக்கூடிய நான் ஒப்படைத்துள்ள மினிட் நோட்டில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் கைப்பட எழுதியதாக காணப்படுகிறது என்றும் அதில் கலந்து கொண்ட நபர்கள் யாரும் கையெழுத்து செய்ததாக இல்லை என்றும் அதில் வாதி ராஜகோபாலே கலந்து கொண்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், ஆகையால் இந்த வழக்கிற்காக பின்னிட்டு பழைய நோட்டில் எழுதப்பட்டு அதை ஆதாரமாக ஒப்படைத்துள்ளோம் என்றால் சரியல்ல. பொதுவாக செயற்குழு கூட்டம் நடந்தால் எத்தனை மணிக்கு எங்கு துவங்கியது யார் தலைமையில் துவங்கியது எத்தனை மணிக்கு முடிவடைந்தது என்ற குறிப்புகள் இருக்கும் என்றால் சரிதான். இது போன்ற சங்கதிகள் நான் அவசரஅவசரமாக தயார் செய்து ஒப்படைத்த ஆவணங்களில் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள 01.01.2010 ந்தேதிய மினிட்டில் மேவை சண்முகராஜாகுறித்து என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் அவர் கல்லூரி துவங்கியது சம்மந்தமாக பேசப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது. கட்சியில் இருந்து ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேசப்பட்டது. உண்மையிலேயே அவர் குறித்து என்ன பேசப்பட்டது என்று எழுதப்பட்டது குறித்து எனக்கு தெரியாததால்தான் நான் ஒப்படைத்த ஆவணத்தில் அவர் குறித்து உள்ள சங்கதிகள் குறித்து கூறாமல் சம்மந்தமில்லாத அதில் எழுதப்படாத சங்கதிகளை சொல்கிறேன் என்றால் சரியல்ல. 01.01.2010 யில் மேவை சண்முகராஜாவை செயற்குழு உறுப்பினர்

பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டார் என்றால் சரிதான். 2011ம் நடந்த செயற்குழு கூட்டத்தில் மேவை சண்முகராஜா கலந்துகொண்டதாக நான் சொல்வது பொய் என்றும், அதற்கான ஆவணங்கள் ஒப்படைத்துள்ளதும் மேற்படி ஆவணங்கள் பின்னிட்டு யோசனை செய்து ஏற்படுத்தப்பட்டது என்பதை வெளிப்படுத்தும் என்றால் சரியல்ல.

**(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒம்/–வெங்கடபதி

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.